TNVR230001412025

**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்.**
**முன்னிலை—திரு. M. சண்முகவேல்ராஜ், பி.ஏ., பி.எல்.,எல்.எல்.எம்.,**
**சார்பு நீதிபதி, இராஜபாளையம்.**
**2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01 ஆம் நாள் திங்கள்கிழமை.**

**O.S. No. 93/2025**
**( CNR-TNVR230001412025)**

நா.நாகசுந்தரம் .... வாதி

**//எதிர்//**

1.கோவிந்தன்

2.முருகன் ... பிரதிவாதிகள்

இந்த வழக்கானது 06.08.2025ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.P.தங்கம் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டு பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலை ஆகாததால், பிரதிவாதிகள் தோன்றாத் தரப்பினர்களாக அறிவிக்கப்பட்டு, வாதி தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை நன்கு கவனமுடன் பரிசீலனை செய்து, வாதி தரப்பு வாதத்தை கேட்டு இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . . .

## தீர்ப்புரை

1) **வழக்கின் தன்மை:–**

பிராதில் வியாஜ்ஜிய தொகை ரூ.7,06,017/–ஐ வாதிக்கு செலுத்த உத்தரவிடுமாறும், அதில் அசல் தொகை ரூ.5,50,000/–த்திற்கு பிராது தேதி முதல் தீர்ப்புத் தேதி வரை 12 சதவீத வட்டியுடனும், தீர்ப்பாணை தேதிக்கு பின்பு வசூல் தேதி வரை 6 சதவீத வட்டியுடன் செலுத்த கோரியும், செலவுத் தொகை கோரியும், இதர பரிகாரங்கள் கோரியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) வழக்குரையின் சுருக்கம் :–**

கடந்த 09.10.2022–ம் தேதி பிரதிவாதிகள் அவர்களுடைய அவசர நிமித்தம் குடும்ப செலவிற்காகவும், சில்லரைக் கடன்களை தீர்ப்பதற்காகவும் ரூ. 5,50,000/– ஐ வாதியிடம் கடனாக பெற்றுக் கொண்டு, மேற்படி கடன் தொகைக்கு மாதம் 1 க்கு ரூ.100/–க்கு 1.00/– வீதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டுள்ளார்கள். மேற்படி கடனுக்கு ஆதரவாக கடந்த 09.10.2022–ம் தேதி அன்று சாட்சிகள் முன்னிலையில் புரோநோட்டு எழுதி கொடுத்துள்ளார்கள். அதனை தொடர்ந்து பிரதிவாதிகள் சுயார்ஜிதமாய் பாத்தியப்பட்ட இராஜபாளையம் சார்பதிவகம், ஆவண எண்.4173/2003 கிரையப் பத்திரம் மற்றும் 4671/2004 நிர் சீர்திருத்தப்

பத்திரம் அசலையும் ஒப்படைத்துள்ளார். இந்நிலையில் மேற்படி கிரையப் பத்திரத்தில் கண்ட சொத்தினை பிரதிவாதிகள் மூன்றாம் நபருக்கு கிரையம் செய்யப் போவதாக பிரஸ்தாபம் செய்து வருகின்றனர். அதனால் மேற்படி 4173/2003 கிரையப் பத்திரத்தில் கண்ட சொத்தினை முன்ஜப்தி செய்து உத்தரவு வழங்க தனியா மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. புரோநோட்டு தொகையை வாதி பலமுறை பிரதிவாதிகளிடம் கேட்டும் அசல் தொகை மற்றும் வட்டியை நாளது தேதிவரை திரும்ப செலுத்தவில்லை. மேற்படி எனவே தாவா தொகையை வட்டியுடன் செலுத்த உத்தரவிடக்கோரி இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) வாதி வழக்கு தாக்கல் செய்த பிறகு, வாதி தரப்பு விசாரணைக்காக இருந்த நிலையில், பிரதிவாதிகளை இந்நீதிமன்றம் அழைத்தும், முன்னிலை ஆகாததால், அவர்கள் ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டு அவர்களுக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

4) கடந்த 25.07.2025 அன்று வாதி திரு.நாகசுந்தரம் அவர்கள் முன்னிலையாகி நிரூபண வாக்குமூலம் ஒன்றை தாக்கல் செய்து தன்னை வா.சா.1 ஆக விசாரித்துக் கொண்டார். அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. 06.08.2025 அன்று வாதி தரப்பு 2 வது சாட்சி விசாரணை செய்யப்பட்டு

அவர் மூலமாக வா.சா.ஆ.5 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இத்தோடு வாதி தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டது. வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**5)** தற்பொழுது இந்த நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டிய முக்கியமான பிரச்சனை என்னவென்றால் வாதியின் தாவா அனுமதிக்கப்படக்கூடியதா? அல்லது இல்லையா? என்பதேயாகும்.

**<u>6) பிரச்சனைக்கான தீர்வு:–</u>**

**6.1)** பிராதில் வியாஜ்ஜிய தொகை ரூ.7,06,017/–ஐ வாதிக்கு செலுத்த உத்தரவிடுமாறும், அதில் அசல் தொகை ரூ.5,50,000/–த்திற்கு பிராது தேதி முதல் தீர்ப்புத் தேதி வரை 12 சதவீத வட்டியுடனும், தீர்ப்பாணை தேதிக்கு பின்பு வசூல் தேதி வரை 6 சதவீத வட்டியுடன் செலுத்த கோரியும், செலவுத் தொகை கோரியும், இதர பரிகாரங்கள் கோரியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6.2) வாதி வழக்கு தாக்கல் செய்த பிறகு, பிரதிவாதிகளை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டார்கள். வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்காக வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டார். வாதி தரப்பு சான்றாவணங்களாக, வா.சா.ஆ.1 ஆக 09.10.2022ம் தேதியிட்ட வாதிக்கு,

கடன் தொகை ரூ.5,50,000/—க்கு பிரதிவாதிக்குகள் எழுதிக் கொடுத்த பிராமிசரி நோட்டு அசல். வா.சா.ஆ.2 ஆக 28.11.2003 ம் தேதியிட்ட பிரதிவாதிகள் கடன் தொகைக்கு ஆதரவாக கொடுத்த இராஜபாளையம் சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட 4173/2003 நிர் கிரைய பத்திரம் அசல். வா.சா.ஆ.3 ஆக 13.12.2004 ம் தேதியிட்ட இராஜபாளையம் சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட 4671/2004 நிர் சீர்திருத்தப்பத்திரம் அசல்.வா.சா.ஆ.4 ஆக 11.03.026 தேதியிட்ட வாதியின் ஆதார் அட்டை நகல். வா.சா.ஆ.5 ஆக முனியசாமி என்பவர் ஆதார் அட்டை நகல். ஆகியவைகள் குறியீடு செய்யப்பட்டது.

6.3) கடந்த 09.10.2022—ம் தேதி பிரதிவாதிகள் அவர்களுடைய அவசர நிமித்தம் குடும்ப செலவிற்காகவும், சில்லரைக் கடன்களை தீர்ப்பதற்காகவும் ரூ. 5,50,000/— ஐ வாதியிடம் கடனாக பெற்றுக் கொண்டு, மேற்படி கடன் தொகைக்கு மாதம் 1 க்கு ரூ.100/—க்கு 1.00/— வீதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டுள்ளார்கள். மேற்படி கடனுக்கு ஆதரவாக கடந்த 09.10.2022—ம் தேதி அன்று சாட்சிகள் முன்னிலையில் புரோநோட்டு எழுதி கொடுத்துள்ளார்கள். அதனை தொடர்ந்து பிரதிவாதிகள் சுயார்ஜிதமாய் பாத்தியப்பட்ட இராஜபாளையம் சார்பதிவகம், ஆவண எண்.4173/2003 கிரையப் பத்திரம் மற்றும் 4671/2004 நிர் சீர்திருத்தப்

பத்திரம் அசலையும் ஒப்படைத்துள்ளார். இந்நிலையில் மேற்படி கிரையப் பத்திரத்தில் கண்ட சொத்தினை பிரதிவாதிகள் மூன்றாம் நபருக்கு கிரையம் செய்யப் போவதாக பிரஸ்தாபம் செய்து வருகின்றனர். அதனால் மேற்படி 4173/2003 கிரையப் பத்திரத்தில் கண்ட சொத்தினை முன்ஜப்தி செய்து உத்தரவு வழங்க தனியாக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. புரோநோட்டு தொகையை வாதி பலமுறை பிரதிவாதிகளிடம் கேட்டும் அசல் தொகை மற்றும் வட்டியை நாளது தேதிவரை திரும்ப செலுத்தவில்லை. மேற்படி புரோநோட்டு தொகை மற்றும் வட்டியை செலுத்த கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

**6.4)** வாதி தரப்பு சாட்சியத்தையும், வா.சா.ஆ. 1 ஆவணத்தை பரிசீலித்ததில், பிரதிவாதிகள் வாதியிடமிருந்து ரூ. 5,50,000/-ஐ கடனாக பெற்றுக்கொண்டு, அதற்கு வாதியின் பெயருக்கு ஒரு புரோநோட்டு ஒன்று எழுதி கொடுத்துள்ளார்கள் என்பதும், மேற்படி புரோநோட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதிகளுடையதுதான் என்பது வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 118 ன் கீழான சட்டப்படியான அனுமானங்கள் வாதிக்கு சாதகமாக எழுகிறது. பிரதிவாதிகளை பொறுத்த வரையில் வாதியின் வழக்கை மறுதளித்து தன் வழக்கை முன்னெடுத்து செல்லவில்லை. பிரதிவாதிகள்

தோன்றாத் தரப்பினர்களாக உள்ள நிலையில், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் வாதி தரப்பு வழக்கு நிரூபிக்கப் பட்டிருப்பதால் பிரதிவாதிகள் தாவா கடன் தொகையைச் செலுத்தக் கடமைப்பட்டவர்கள் என்பதாலும் வாதி கோரியுள்ள பரிகாரமானது வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று தீர்மானிக்கப்படுகிறது.

**7)** ஆகவே, இறுதியாக இந்த வழக்கு அனுமதிக்கப்படுகிறது. பிரதிவாதிகள் வாதிக்கு ரூ.7,06,017/–ஐ செலுத்த வேண்டும் என்றும், மேற்படி கடன் தொகையில் அசல் தொகை ரூ.5,50,000/–க்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் தீர்ப்பாணை காலம் வரைக்கும் 9% ஆண்டு வட்டியுடனும், தீர்ப்பாணை தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரைக்கும் 6% ஆண்டு வட்டியுடனும் செலுத்த வேண்டும் என்றும், வழக்கு செலவுத் தொகையை வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்த வேண்டும் என்று இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

இத்தீர்ப்புரையானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 01.09.2025–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

SHUNMUGAVEL RAJ

Digitally signed by SHUNMUGAVEL RAJ

**சார்பு நீதிபதி,**

**இராஜபாளையம்**

**<u>வாதி தரப்பு சாட்சிகள்:-</u>**

| | |
|---|---|
| வா.சா.1 | திரு.நாகசுந்தரம் (வாதி) |
| வா.சா.2 | திரு.R.முனியசாமி |

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | 09.10.2022 ம் தேதியிட்ட வாதிக்கு கடன் தொகை ரூ.5,50,000/-க்கு பிரதிவாதிகள் எழுதிக் கொடுத்த புரோநோட்டு அசல். |
| வா.சா.ஆ.2 | 28.11.2003 ம் தேதியிட்ட பிரதிவாதிகள் கடன் தொகைக்கு ஆதரவாக கொடுத்த இராஜபாளையம் சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட 4173/2003 நிர் கிரைய பத்திரம் அசல். |
| வா.சா.ஆ.3 | 13.12.2004 ம் தேதியிட்ட இராஜபாளையம் சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட 4671/2004 நிர் சீர்திருத்தப்பத்திரம் அசல் |
| வா.சா.ஆ.4 | 11.03.2016 வாதியின் ஆதார் அட்டை நகல். |
| வா.சா.ஆ.5 | முனியசாமி என்பவரின் ஆதார் அட்டை நகல். |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** – இல்லை.

SHUNMUGAVEL RAJ

Digitally signed by SHUNMUGAVEL RAJ

**சார்பு நீதிபதி,**

**இராஜபாளையம்**